மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன இருந்தாலும் தஞ்சாவூர் பண்பாடே தனிதான். அந்த முறையிலே நம்முடைய நண்பர் சிவபுண்ணியம் அவர்கள் விவாதித்திருக்கின்றார் என்றால் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், உண்மையில் யார் யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்? யார் யார் சாட்சி சொல்லவே வர முடியவில்லை என்ற விவரங்கள் எங்களுக்கு இதுவரையிலே அளிக்கப்படவில்லை. அப்படி அளிக்கப்பட்டால் அதை ஆராய்ந்து அதிகாரிகள் மூலமோ அல்லது தாங்களே அதைப்பற்றி விசாரித்தறிந்து அவர்களுக்கு ஏதேனும் நிவாரணம் அளிக்க வேண்டுமென்றால், அதை அளிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. ஆனால், எடுத்த எடுப்பிலே போராட்டம் என்று அறிவிப்பது அவ்வளவு நல்லதல்ல.

(ஈ) உள்ளாட்சித் தலைவர்களின் தேசிய மாநாட்டில் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் பங்கேற்காதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளையதினம் உள்ளாட்சி தலைவர்களுடைய தேசிய மாநாடு நடைபெறவிருக்கிறது. இந்த மாநாட்டை, நம்முடைய மாநில அரசின் உரிமையைப் பறிப்பதாகக் கருதி, அதை அரசுச் செயலாளர் அவர்கள் புறக்கணித்து ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். இது குறித்த விவரங்களை நாளையதினம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விவர அறிக்கைமூலம் வைத்தால் அது உள்ளாட்சி அமைப்புகளுடைய உரிமையைப் பெறுவதற்கும், மாநில அரசினுடைய உரிமையைப் பெறுவதற்கும் உதவியாக இருக்கும். அந்த அறிக்கையை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வைப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

•மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய விவரக் குறிப்புகள் எல்லாம் இப்போது என்னுடைய கையிலே இருக்கின்றன. இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சகோதரி பாலபாரதி

அவர்கள் தெரிவித்ததுபோல, நாளையதினம் இதே அவையில் விவர அறிக்கையை வைக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

முற்பகல் *10-25*

(உ) விளாத்திகுளம் தொகுதி, புளியங்குளம், வைப்பாற்று வெள்ளத்தில் இறந்தவர் குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லாம் அவையில் இருக்கின்றன. பிறகு எடுக்கப்படும், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் ஒன்றுபோல் எழுந்து நின்றால், யார் பேசுவதைக் கேட்பது? நான் அவையை நடத்த வேண்டாமா? *(குறுக்கீடுகள்)*

விளாத்திகுளம் தொகுதி, "வைப்பாற்றில் 27-3-2008 அன்று புளியங்குளம் அருகே வெள்ள நீரில் மூழ்கி திரு. சின்னத்தம்பி என்கிற முனியசாமி இறந்துவிட்டதால் அவருடைய குடும்பத்திற்கு நிவாரணம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன் அவர்கள் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன். *(குறுக்கீடுகள்)*

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், எனது விளாத்திகுளம் தொகுதிக்குட்பட்ட புளியங்குளம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சின்னத்தம்பி என்கிற முனியசாமி தேவர் 27-3-2008 அன்று வைப்பாற்றைக் கடந்து தன் தோட்டத்திற்குச் செல்லும்போது பெய்த கன மழையால் திடீரென்று ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் அடித்துச் செல்லப்பட்டு மரணம் அடைந்துவிட்டார். அவருடைய உடலை தீயணைப்புத் துறையினரால்கூட கண்டுபிடிக்க முடியவில்லை. தூத்துக்குடியிலிருந்து சிப்பிக் குளிப்பவர்கள் வந்துதான் உடலை எடுத்தனர். உடலை விளாத்திகுளம் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றால், அங்கு post-mortem செய்வதற்குக்கூட மருத்துவர்கள் இல்லை. அவருக்கு முனியம்மாள் என்ற மனைவியும், கற்பகம் என்ற மகளும், திருமணம் ஆகாத சண்முகலட்சுமி என்ற மகளும், மணிகண்டன் என்ற மகனும் உள்ளனர். வயதான தந்தையும் அவருடன் இருந்து வந்திருக்கிறார்.